குமரி மாவட்டத்தில் தென்னை, தென்னை சார்ந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி கூட்டுறவுத் துறைமூலம் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும். அதிக ருசியுடன் இயற்கையானதுமான இளநீரைப் பதப்படுத்தி விற்பனை செய்ய கூட்டுறவுத் துறை மற்றும் வேளாண்மைத் துறை ஆவன செய்ய வேண்டும்.

அரசு இயந்திரம் நல்லமுறையில் இயங்கவும் படித்த திறமையான வேலையில்லாத இளைஞர்களுக்கு வாழ்வில் ஒளியேற்றவும் வேளாண்மைத் துறை, உள்ளாட்சி, ஊராட்சிகளில், பேரூராட்சி, கூட்டுறவுத் துறை, வருவாய்த் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களைப் போர்க்கால அடிப்படையில் நிரப்பிட அரசு ஆவன செய்ய வேண்டும்.

மத்திய அரசின் விவசாய தொழில்நுட்ப மேலாண்மைக் குழுமம்–Agricultural Technical Management Agency (ATMA) திட்டம் சிறப்பாக, ஆக்கபூர்வமாகச் செயல்பட அரசு எடுத்துள்ள எல்லா முயற்சிகளையும் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

6. விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அரக்கு மாளிகை போன்ற ஒரு கட்டடம் புதிய தலைமைச் செயலகம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெயரால் உருவாயிற்று. அதைப்பற்றி விசாரணை கமிஷன் வேண்டுமென்று தே.மு.தி.க. நிறுவனத் தலைவர், புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களும் இதே மன்றத்திலே ஆதரித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன காரணத்தினாலோ அதை விசாரிப்பதற்கு ஒத்துழைப்புத் தராமல் நீதிமன்றத்திற்குக்கூட சென்றிருக்கின்றார்கள். இந்த நிலையில் அந்தக் கட்டடம் என்ன ஆகுமோ என்று எல்லோர் உள்ளத்திலேயும் ஒரு சந்தேகம்

இருந்துகொண்டேயிருந்தது. இன்றைக்கு அடி வயிற்றில் பால் வார்த்ததைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பைத் தந்திருக்கின்றார்கள். எப்படி வடபுலத்தின் தலைநகராம் டில்லியில், All India Institute of Medical Sciences என்கின்ற மிக உயர்ந்த தரமுள்ள மருத்துவமனை இருக்கிறதோ அதேபோல, தென்னகத்திலேயும் அதனுடைய தலைநகரான சென்னை மாநகரில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு அருமையான மருத்துவமனை உருவாவதற்கும், மருத்துவக் கல்லூரி உருவாவதற்கும் ஒரு வாய்ப்பைத் தந்திருக்கின்றார்கள்.

பொதுவாக 110 விதி என்றால் அதன்மீது பேசக்கூடாது என்றிருக்கிறது. அதனால்தான் நாங்கள் பேசாமல் இருந்தோம். இல்லையென்றால் முதலிலேயே இதை நாங்கள் சொல்லியிருப்போம். ஏதோ கல்லான அகலிகை, இராமன் கால் பட்டதனால் மீண்டும் பெண் ஆனாள் என்பதுபோல (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தியிருக்கின்றார்கள். இது என்றைக்கும் வரலாற்றில் இடம்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

வெற்று விளம்பரத்திற்காகக் கட்டப்பட்ட கட்டடம், இன்று ஏழை எளியவர்களின் உடல் நலத்திற்காக, உயிர் காப்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) உருவாகியிருக்கிறது என்று கருதுகிறபோது தேசிய முற்போக்குத் திராவிட கழகம் இதை மனதார இரு கரம் கூப்பி வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணத்திலே, கோபாலபுரத்து பணத்திலே அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பணத்திலே கட்டப்பட்ட கட்டடம் பயன்பட வேண்டுமே என்கிற ஆதங்கத்தோடு எங்களுடைய கருத்துகளை ஆளுநர் உரைமீதான விவாதத்தின் போது நாங்கள் சொன்னோம். அப்போதுகூட இவ்வளவு விரைவில் இந்தப் புதிய கட்டடத்திற்கு ஒரு சாபவிமோசனம் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மிக விரைவான சாபவிமோசனம். இந்தக் கட்டடத்தினுடைய அமைப்புக்கேற்ப, அதனுடைய தோற்றத்திற்கேற்ப ஒரு நல்ல வழியை

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் காட்டியிருக்கிறார்கள். அது கல்லூரிக்குதான் லாயக்கு (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி நடத்தும் இடமாக அது இருக்க முடியாது என்கிற முறையிலே அவர்கள் செய்திருக்கிறார்கள். AIIMS–ஐப்போல ஆய்வு நிறுவனமாக, ஒரு சிறந்த மருத்துவமனையாக அது இருக்கும் என்பதும் சிறப்புக்குரியது.

தமிழகத்திலே இப்போது M.S., M.D., போன்ற சிறப்பு மருத்துவ மேல் படிப்பிற்கு இடம் போதவில்லை. இன்னும் அதிகம் பேரைப் படிக்க வைக்க வேண்டுமென்கிற ஒரு தேவையிருக்கிறது. இந்த நிறுவனத்தால் நிச்சயமாக அதை நிறைவேற்ற முடியும். அதன்மூலமாக தமிழகத்தில் ஒரு மிகப்பெரிய வாய்ப்பு கிடைக்கும்.

தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களிலே இப்போது ரூபாய் 50 இலட்சம், ரூபாய் 60 இலட்சம் என்று கொடுத்துதான் M.S., M.D., படிக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. அதற்கு ஒரு தீர்வாக இது அமையும். இந்த இடத்திற்கு மிக அருகிலேயே பொது மருத்துவமனை இருக்கிறது. இடிக்கப்பட்ட சிறையிருந்த நிலம் இருக்கிறது. எனவே, ஒருங்கிணைந்த வளாகமாக மிகச் சிறப்பான ஒரு பொலிவை இது நிச்சயமாகப் பெறும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த அருமையான தீர்வை உருவாக்கிக் கொடுத்ததற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்பை, பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் தொலைநோக்குப் பார்வையோடு கொண்டு வருகிறார்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் தொகைநோக்குப் பார்வையோடுதான் அந்தக் கட்டடத்தைக் கட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தக் கட்டடத்தில் சாதாரண ஏழையெளிய மக்கள் மருத்துவ வசதி பெறும் வகையிலே, புது டில்லியிலே உள்ள AIIMS–க்கு இணையாக இந்த மருத்துவமனை உயர்த்தப்படும் என்று சொல்லியதோடு, அங்கே மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" என்கின்ற வாக்கிற்கேற்ப, இப்படிப்பட்ட கட்டடங்களெல்லாம் என்ன ஆகுமோ என்று ஏங்கிக்கொண்டிருந்த நிலையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில், மருத்துவக் கல்வி கிடைக்குமா என்று ஏங்கிக்கொண்டிருக்கக்கூடிய இளைஞர்கள் மத்தியில் மிகப்பெரிய ஒரு மகிழ்ச்சியளிக்கக்கூடிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் முழுமனதோடு வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயிலில் செல்லும்போது, ஜங்ஷனுக்குள் எல்லாம் நுழையும்போது, தண்ணீர் தொட்டி, பெட்ரோலியத் தொட்டிகளைப் பார்ப்பதுபோல, அண்ணா சாலையிலும் ஒரு water tank, தண்ணீர் தொட்டியைப் பார்க்கக்கூடிய நிலையிலே சென்ற ஆட்சியினுடைய அலங்கோலத்தின் சின்னமாக இருந்த கட்டடத்தில், 14—வது சட்டப் பேரவையை நடத்தாமல், வரலாற்றுச் சிறப்புமிகுந்த, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே இந்தச் சட்டப் பேரவையை நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே அமரக்கூடிய வாய்ப்பையெல்லாம் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைநகர் புது டில்லியில்தான் சாதாரண மக்களும் பயனடையக்கூடிய வகையில் AIIMS போன்ற சிறப்பான மருத்துவமனை இருக்குமென்ற நிலையை மாற்றி, நம்முடைய தமிழகத்தினுடைய தலைநகர் சென்னையிலும்கூட ஏழையெளிய மக்கள் பயனடையக்கூடிய வகையிலே ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலே அமைந்த அரசுக் கட்டடத்தில் சிறப்புமிகுந்த super-speciality மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரியும் அமையும் என்ற

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நல அறிவிப்பை மனிதநேய மக்கள் கட்சி மனமார வரவேற்கின்றது, பாராட்டுகின்றது. நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் அவசர, அவசரமாக எல்லாக் கல்வெட்டுகளிலும் தன்னுடைய பெயர் இருக்கவேண்டுமென்று அன்றைய முதல்வர் எண்ணி, அந்தச் சட்டமன்றக் கட்டடத்தைக் கட்டினார்கள். ஆனால், அதில் நிச்சயமாக சட்டமன்ற வளாகம் அமைய முடியாது என்ற அடிப்படையில், அதிலே சர்வதேச தரம் மிக்க மருத்துவக் கல்வியை அளிக்கின்ற வகையிலும், பலதுறை சிறப்பு வைத்திய முறைகளை அளிக்கக்கூடிய வகையிலும், ஒரு தலைசிறந்த மருத்துவமனை அந்த வளாகத்திலே அமைவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாகப் பாராட்டி அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை ஒரு மருத்துவராகப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்ட அந்தக் கட்டடம் வீணடிக்கப்பட்டுவிடும்; இவர்கள் வீணடிக்கிறார்கள் என்றெல்லாம் மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே சொல்லிக் கொண்டிருக்கிறது. இது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற எண்ணம் பலருக்கும் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலில் இதைச் சிறப்பாக diagnose செய்திருக்கிறார்கள். அரசு என்ன செய்யவேண்டும்; இதில் என்ன மாதிரி மருத்துவம் செய்யவேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) எப்படிச் செய்தால், நாம் இதைக் காப்பாற்றமுடியும் என்று

சிந்தித்துப் பார்த்திருக்கிறார்கள். நான் எப்பொழுதும் சொல்லுகிறமாதிரி, We have got a pro-active Chief Minister. இதை ஒரு historical announcement ஆக நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எதையும் தொலைநோக்குப் பார்வையுடன் சிந்தித்துச் செயல்படுபவர்கள் என்பதுதான் இதற்குக் காரணம். இதைப்பற்றி நாம் சொல்லவேண்டுமென்று சொன்னால், அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள்; இதைப்பார்த்து அவர்கள் ஒன்றுமே பேசவில்லையே; அவர்கள் ஏதாவது சொல்லமாட்டார்களா, ஏதாவது கண்டுபிடித்து, நாம் எதிர்த்துப் பேசிவிடலாமா என்று இருப்பவர்கள் உண்டு. எரிமலை அமைதியாகத்தான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இது ஒரு நல்ல எரிமலை. வெடிக்கும்போது மற்றவர்களுக்குச் சிறப்பாக நல்லது செய்கின்ற எரிமலையாகத்தான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்க்கின்றேன். ஒரு பாடல் மட்டும் இந்த நேரத்தில் என் நினைவுக்கு வருகிறது.

பிற்பகல் 1–00

"நீங்க நல்லா இருக்கோனும் நாடு முன்னேற
இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற"
(மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, மருத்துவம் என்பது பொருளாதார அடிப்படையில் எடுத்துக்கொண்டாலும்கூட ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதலில் சுகாதாரம் வேண்டும், சுற்றுச்சூழல் முக்கியம், கட்டுமானப் பணிகள் முக்கியம். ஆக அனைத்தையும் ஒன்றுகூட்டி எது தேவையோ, மக்களுக்கு எதைச் செய்ய வேண்டுமோ, ஏழையெளிய மக்களுக்கு எதைச் செய்ய வேண்டுமோ, அதை உணர்ந்து, ஏழையெளிய மக்களும் வாழ்வில் உயரவேண்டும், அவர்களும் சீராக, சிறப்பாக, சுகாதாரத்துடன் வாழவேண்டுமென்கிற எண்ணத்திலே AIIMS அளவிற்கு, ஒரு சிறந்த மருத்துவமனையை உருவாக்கியதற்கு சமத்துவ மக்கள் கட்சி சார்பாக வாழ்த்துகிறேன், வாழ்த்துகிறேன், வாழ்த்துகிறேன் என்று சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நிலையிலே பல்வேறு துறைகளையும் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, துறை சார்ந்து மக்களுக்கு ஆற்றவேண்டிய தொண்டினை, திட்டத்தின் வாயிலாக பல கோடி ரூபாயை வாரி இறைத்து மக்களுக்கு நன்மை செய்துவருகிற சூழ்நிலையில் அம்மா அவர்கள் விதி 110—ன்கீழ் ஒரு அறிக்கை தருகிறார்கள் என்றாலே, நாட்டு மக்களுக்கு, ஆளுநர் உரை அல்லது நிதிநிலை அறிக்கை இரண்டிலும் சொல்லப்படாத செய்தியை, இரண்டிலும் சொல்லப்படாத திட்டத்தை, சிறப்புச் செய்தியாக 7 கோடி தமிழர்களுக்கும் அவர்கள் அறிவிக்கிறார்கள் என்பதுதான் மதிப்புமிக்க மாமன்ற உறுப்பினர்களின், நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கும். அந்தவகையில் இன்று அம்மா அவர்கள் அறிவித்திருப்பது தென்னிந்தியாவிலே, வடநாட்டில், டில்லியில் இருக்கக்கூடிய அளவிற்கு ஒரு பலதுறை உயர் சிகிச்சை மையமாக மருத்துவமனையும், உயர் மருத்துவக் கல்லூரியையும் சென்னையிலுள்ள மிக முக்கியமான இடத்தில்—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, கருணாநிதியினுடைய ஆட்சியில் ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் செலவழிக்கப்பட்டு முடங்கிக் கிடந்த அந்தக் கட்டடத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் தாராளமாக அளித்திருப்பதை 7 கோடி தமிழர்கள் மட்டுமல்ல, ஏழையெளிய, சாமானியருடைய நோயினைத் தீர்க்க, பிணி நீக்க இந்தத் திட்டத்தை அறிவித்திருப்பதை தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை சார்பாகப் பாராட்டி, வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அறிவிப்பை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஒருமனதாக, ஆதரித்து வரவேற்றுள்ளார்கள். இந்தியளவிற்கு மட்டுமல்லாமல், உலகளவிலும் மக்கள் பயன்படக்கூடிய அளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.